பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 02 திங்கட்கிழமை 19.09.2022 கதிர் 316

**இது ரகசியம் அல்ல!**

நேற்று தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம், நான் எதிர்வு கூறியமைக்கு மாறாக - வழமைக்கு வித்தியாசம் இல்லாத அமைதியில் - நடந்து முடிந்திருக்கின்றது.

கட்சித் தலைவர் கூட ☞2

# அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு; இந்தியா கோருவதும் அதுதான்

## பேச்சாளர் சுமந்திரன் நேற்று விளக்கம் தமிழரசு மத்திய குழுக் கூட்டத்தின் பின்




(வவுனியா செய்தியாளர் கி.வசந்தரூபன்)

வவுனியா,செப்ரெம்பர்19

அரசியல் தீர்வு என்பது சமஷ்டி கட்டமைப்பிலான ஓர் அதிகார பகிர்வாக - அர்த்தமுள்ளதாக - இருக்க வேண்டும். அத்தகைய அதிகார பகிர்வையே நாம் ஏற்றுக் கொள்வோம். இந்தியாவும் அந்த நிலைப்பாட்டிலேயே உள்ளது.

- தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார். ☞2

# ஜெனிவா பிரேரணை வரைவு: தமிழ்க் கட்சிகள் அதிருப்தி!






கொழும்பு, செப்ரெம்பர் 19

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பில் பிரிட்டன் தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால் தயாரிக்கப்பட்டிருக்கும் புதிய பிரேரணையின் உள்ளடக்கம் தொடர்பில் பெருமளவிற்குத் திருப்தியடைய முடியாது எனவும், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துமாறு வலியுறுத்தப்படாமை முக்கிய குறைபாடு எனவும் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ☞2

# ரணிலும் துணைவியாரும் மகாராணிக்கு அஞ்சலி




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜனாதிபதியின் பாரியார் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க ஆகியோர் நேற்று மாலை லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் மண்டபத்தில் இரண்டாம் எலிசபெத் மகாராணிக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்வில் பிரித்தானியாவுக்கான இலங்கை தூதுவர் சரோஜா சிறிசேனவும் கலந்துகொண்டார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. ☞10

# இறக்குமதித் தோடம்பழம் ஒன்று ரூ.600 மேல் விலை

## திராட்சை கிலோ ஐயாயிரம் ரூபா



இறக்குமதி செய்யப்பட்ட தோடம்பழம் ஒன்று 600 ரூபாய்க்கு மேல் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

விற்பனை நிலையங்களில் ஒரு கிலோ ☞10

# ஜெனிவாவில் இந்தியப் பிரதிநிதியுடன் சுமந்திரன் வெள்ளியன்று ஆலோசனை




ஜெனிவா சென்றிருந்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், அங்கு ஐக்கிய நாடுகள் சபைக்கான இந்தியாவின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி இந்த்ரா மணி பாண்டேயைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் ஜெனிவாவில் நடைபெற்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் 51 ஆவது கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமானது. ☞10

# இராஜாங்க அமைச்சர்கள் நியமனம் பெற்றவர்கள் கடும் அதிருப்தியிலாம்!

இலங்கையில் தற்போது நியமிக்கப்பட்டுள்ள இராஜாங்க அமைச்சர்கள் தமக்குக் கிடைத்துள்ள சலுகைகள் தொடர்பில் அதிருப்தியில் இருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றைய ஞாயிறு ‘சண்டே ரைம்ஸ்’ இவ்விடயத்தை தெரிவித்துள்ளது.

இராஜாங்க அமைச்சுப் பதவிகளை தராவிட்டால் ஜனாதிபதியின் வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்கப் போவதில்லை என பொதுஜன முன்னணி உறுப்பினர்கள் முன்னதாக அச்சுறுத்தியிருந்தனர் எனவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ☞10

# 46 இலங்கையருடன் மாயமான படகு ரீயூனியன் தீவில் மீட்பாம்!

46 பேருடன் புறப்பட்ட பின்னர் பல வாரங்களாகக் காணாமல் போயிருந்த தஹாமி துவா என்ற படகு ரீயூனியன் தீவின் பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

நீர்கொழும்பு மீன்பிடி துறைமுகத்தில் இருந்து கடந்த ஜூலை மாதம் 21 ஆம் திகதி ☞10

# அதிகாரப் பகிர்வு, இராணுவமயப்படுத்தலுக்கு முடிவுகட்டல் பொருளாதார விருத்திக்கு அவசியம் என்கின்றார் கரி சங்கரி




அதிகாரப்பகிர்வும் இராணுவமயப்படுத்தலை முடிவிற்கு கொண்டு வருவதும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமான விடயங்கள் என கனடா நாடாளுமன்ற உறுப்பினர் கரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

தமிழ் கார்டியனுடனான கருத்துப்பகிர்வின் போது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் பெரிதாக்கப்பட்டுள்ள இராணுவம் குறித்து கரிசனை வெளியிட்டு ஜூன் மாதம் சர்வதேச நாணய நிதியத்திற்கு கடிதம் எழுதினார் எனத் தெரிவித்துள்ள அவர் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையில் இந்த விடயம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இராணுவம் பெரிதாக்கப்பட்டுள்ளதாக காணப்படுகின்றது. ☞10

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழமைக்கு மாறாக நேற்று நீண்ட நேரம் பேசவில்லை என்றால் பார்த்துக் கொளுங்களேன். 'மைக் என்றால் மைசூர்பாகு' என்ற நினைப்பைத் தள்ளி வைத்து, மற்றவர்கள் பேச இடமளித்துப் பார்த்து நின்றார் கட்சித் தலைவர். நாங்கள் திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டி வந்தமையால் அவர் தம்மைத் திருத்திக் கொண்டு விட்டாரோ என்னவோ...!

கட்சியில் நடத்தப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வரும் தேசிய மாநாட்டை வரும் டிசம்பர் 17,18 ஆம் திகதிகளில் நடத்தும் தீர்மானம் இக்கூட்டத்தில் எடுக்கப்படலாம் என்று நேற்று என் பத்தியில் கோடி காட்டியிருந்தேன்.

அது நமது கிளிநொச்சி சின்ன ஜமீன் தாருக்குப் பிடிக்கவில்லையோ என்னவோ...?

தமிழரசுக் கட்சியை தந்த செல்வா ஸ்தாபித்தது 1949 டிசம்பர் 18ஆம் திகதி ஆகும். அந்தத் தினத்தை ஒட்டி அடுத்த தேசிய மாநாட்டை டிசெம்பர் 17, 18 ஆம் திகதிகளில் நடத்தலாம் என்று ஒரு தீர்மானம் இக்கூட்டத்தில் வரக்கூடும் என நான்குறிப்பிட்டுஇருந்தேன். அதுபோலவே அந்தத் தினங்களில் தேசிய மாநாட்டை நடத்துவதற்கான யோசனை நேற்றைய கூட்டத்தில் பிரேரிக்கப்பட்டது.

“இந்த யோசனைத்திட்டத்தை நாங்கள் காலையில் பேப்பரில் பார்த்து விட்டோம். பேப்பர்காரர் கூறும் தினத்தில் நாங்கள் தேசிய மாட்டை நடத்தத் தேவையில்லை. அதை இன்னொரு திகதிக்கு தள்ளி வைப்போம்” என்று கிளிநொச்சி சின்ன ஜமீன்தார் கூற, அந்த விடயத்தில் முடிவு எட்டப்படாமல், விடயம் தள்ளி வைக்கப்பட்டது.

நான் முந்திக் கொண்டு செய்தியை - தகவலை - தந்தமையை வைத்து, தேசிய மாநாட்டை நடத்தும் முடிவை தள்ளி வைத்து விட்டார்கள் தமிழரசுக் கட்சிக்காரர்கள். இதனால் கட்சியின் மாநாடு இன்னும் சில மாதங்கள் தள்ளி போகும் போல .எது, எப்படி என்றாலும் கட்சியின் தேசிய மாநாடு தள்ளிப் போகப் போக அதுவரை மாவை சேனாதிராஜாவின் கட்சி தலைமையும் நீடிக்கும் என்பதில் மாவை மிகுந்த சந்தோசம் அடைந்திருப்பார்.

நான் தான் முந்திக்கொண்டு தகவல் தரப் புறப்பட்டு விடயத்தை குழப்பி விட்டேனோ என்னவோ...!

ஜெனிவா சென்றிருந்த சுமந்திரன் கடைசி நேரத்தில் இலங்கை திரும்பும் தமது விமான டிக்கெட்டை மாற்றி, நேற்று விடிகாலையிலேயே கொழும்பை வந்தடைந்து விட்டார். அதனால் நேற்றுக் காலை மத்திய குழு கூட்டம் ஆரம்பிக்க முன்னரே அவர் வவுனியாவில் ஆஜர்.

அவர் நேற்று முழு நேரமும் - முழு நாளும் - கூட்டத்தில் அசையாமல் இருந்த மையாலோ என்னவோ அவருக்கு எதிரான வழமையான குரல்கள் எல்லாம் நேற்றுக் கட்சிக்குள் அடக்கியே வாசிக்கப்பட்டன.

சுமந்திரனின் செயற்போக்கினால் கட்சிக்குள் அவருக்குக் காத்திரமான எதிர்ப்பு இருப்பதாக கூறப்பட்டாலும், அது நேற்று அடக்கியே வாசிக்கப்பட்டமை ஏன் என்பது தெரியவில்லை.

எதிரில்புலிபதுங்குவது பாய்ச்சலுக்கான தயார் உத்தியாகவும் இருக்கலாம். சுமந்திரனுக்கு எதிராகக் கட்சிக்குள் ஊற்றெடுத்த எதிர்ப்பு, நேற்றைய கூட்டத்தில் அமுக்கி வாசிக்கப்பட்டதன் அர்த்தம் அதுவென்றே நான் நினைக்கிறேன். உண்மை நிலை யாது என்பதற்குக் காலம் பதில் கூறும் என எதிர்பார்க்கலாம்.

- மின்னல் -

## அர்த்தமுள்ள அதிகாரப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியாவில் உள்ள தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற மத்திய செயற்குழுக் கூட்டத்தின் பின் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்தியசெயற்குழுக் கூட்டம் காலையில் இருந்து மாலை வரை வவுனியா அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் எமது மக்களைப் பாதிக்கும் பல விடயங்கள் தீர்க்கமாக கலந்து ஆலோசிக்கப்பட்டன. விசேடமாக நிலங்கள் அபகரிப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் மகாவலி, தொல்லியல் திணைக்களம், வனவிலங்கு பாதுகாப்பு, வனப்பாதுகாப்பு என்று வெவ்வேறு சட்டங்களின் அடிப்படையிலும், வேறு விதமாகவும் நிலங்களுக்கு ஏற்பட இருக்கின்ற ஆபத்துக்களை ஆராய்ந்தோம்.

திருகோணமலையில் தற்போது ஏற்பட்டுள்ள சவால் குறித்துப் பேசினோம். குறிப்பாக திருக்கோணேஸ்வரத்திற்கு சொந்தமான மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஏற்பட்டுள்ள சவால்கள் குறித்து ஆராயப்பட்டது. இது தொடர்பாக கட்சியினால் சில குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இந்த விடயங்களை உடனடியாக ஆராய்ந்து அடுத்த மத்திய செயற்குழுக் கூட்டத்துக்கு முன்னதாக அனைவருக்கும் அனுப்பி வைக்குமாறு அக்குழுக்கள் பணிக்கப்பட்டுள்ளன.

அதேவேளையில், திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்களது வாழ்விடங்களுக்கு ஏற்பட்டுள்ள மிக மோசமான பாதிப்புக்கள் குறித்து திருகோணமலையில் இருந்து கட்சி மாவட்ட மட்ட உறுப்பினர்கள் தமது கருத்துக்களை கூட்ட ஆரம்பத்தில் பகிர்ந்து சென்றிருக்கிறார்கள். இந்த விடயங்கள் சம்பந்தமாக கட்சித் தலைவர், சிரேஷ்ட உபதலைவர், கட்சி செயலாளர் ஆகியோருடன் நானும் சென்று எங்களுடைய பெரும் தலைவர், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் இரா.சம்பந்தனைச் சந்தித்து இவற்றைக் கையாள்வது குறித்த உபாயங்கள் தொடர்பாகப் பேசுவது என முடிவு எடுத்துள்ளோம்.

அத்துடன், கட்சி மாநாட்டுக்கு முன்பாக எமது கட்சிக் கிளைகள் புனரமைத்தலில் உள்ள முன்னேற்றங்கள் குறித்து மாவட்டம் மாவட்டமாக ஆராய்ந்தோம். கொரோனாத் தொற்று, அதன்பின் எரிபொருள் பிரச்சினை போன்றவை காரணமாக நலிவடைந்து இருந்த இந்தச் செயற்பாடுகள் தற்போது ஓரளவுக்கு முன்னேற்றமடைந்துள்ளன. ஒக்டோபர் மாத இறுதிக்கு முன்னதாக அனைத்து மாவட்ட கிளைகளையும் புனரமைத்து அதனைத் தொடர்ந்து கட்சி மாநாட்டை நடத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிரான கையெழுத்துப் போராட்டம் இடையில் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக ஒரு சில மாதங்கள் தடைப்பட்டிருந்தது. அது மீளவும் முடுக்கி விடப்பட்டுள்ளது. ஓர் ஊர்தியுடன் சென்று பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக நடமாடும் செயற்பாடுகளை தற்போது முன்னெடுத்துள்ளோம். இலங்கையின் அனைத்து மாவட்டங்களுக்கும் இது கொண்டு செல்லப்படவுள்ளது. வடக்கு, கிழக்கில் இலங்கைத் தமிழரசுக் கட்சி வாலிபர் முன்னணியினர் முன்னின்று செய்கிறார்கள். வடக்கு செயற்பாடு நிறைவடைந்துள்ளது. அடுத்து அநுராதபுரம் நோக்கி நகரவுள்ளோம். தொடர்ச்சியாக அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று இறுதியாக அம்பாந்தோட்டைக்குச் செல்லவுள்ளோம்.

இதற்கு பல்வேறு கட்சிகள், அமைப்புக்கள் ஆதரவை வழங்கியுள்ளன. எதிர்க்கட்சி வரிசையில் இருக்கின்ற கட்சிகள், 2000 தொழிற்சங்களை கொண்ட ஒன்றியமும், மக்கள் அமைப்புக்களும் என பலர் ஆதரவு வழங்கியுள்ளார்கள். தென்னிலங்கை மாவட்டங்களுக்கு நாம் செல்லும் போது அந்த அமைப்புக்கள் முன்னின்று செய்வார்கள். அந்தச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பது அவர்களதும் கோரிக்கை. அந்த சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். இந்த போராட்டத்தின் பலனாக இவை இரண்டையும் அடைவோம் என்ற நம்பிக்கை இருக்கிறது.

ஐ.நாவின் இந்தியாவின் கூற்றிலே, இலங்கையில் தமிழ் மக்களுக்கான அரசியல்தீர்வு ஒன்றை கொடுப்பதில் இலங்கை அரசாங்கம் கால இழுத்தடிப்பு ஒன்றைச் செய்து வருகின்றது என்று சொல்லியிருக்கிறார்கள். 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல் படுத்துவது உள்ளடங்கலாக அதிகாரப் பகிர்வு செய்யப்பட வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே 13 ஆம் திருத்தச் சட்டத்துடன் இந்த விடயம் நிறைவுக்கு வருகிறது என அவர்கள் சொல்லவில்லை. எனவே, அந்த நிலைப்பாடு நல்ல நிலைப்பாடு. முதல் படியாக 13 ஆவது திருத்தத்தை அமுல் படுவத்துவதாக இருந்தாலும் அதனைச் செய்யட்டும். ஆனால் அது தீர்வல்ல. அரசியல் தீர்வு என்பது ஒரு சமஷ்டிக் கட்டமைப்பிலான ஓர் அதிகார பகிர்வு. அது அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும். அத்தகைய அதிகாரப் பகிர்வையே ஏற்றுக் கொள்வோம். இந்தியாவும் அந்த நிலைப்பாட்டிலேயே உள்ளது.

ஐ.நாவில் மனித உரிமைகள் கவுன்சிலில் நிறைவேற்றப்படப் போகும் தீர்மானங்கள் தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை நான் பேசியுள்ளேன். அதில் என்ன மாற்றம் தேவை எனத் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அதனை நிறைவேற்றப் போகிறவர்கள் இணை அனுசரணை நாடுகள். அவர்கள்தான் இறுதியில் அதில் வேறு எதனையும் சேர்த்துக் கொள்ளலாமா, இதைப் பலப்படுத்தலாமா, அப்படி செய்தால் வாக்குகள் கூடுமா, குறையுமா என்கின்ற கடைசி தீர்மானங்களை எடுப்பார்கள். ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ள வரைவு ஓரளவு எல்லா விடயங்களையும் அணுகுகின்ற ஒரு வரைவாக உள்ளது. அது இன்னும் பலமூட்டப்பட வேண்டும் எனக் கோரியுள்ளோம். எல்லோருடைய கருத்துகளையும் உள்வாங்கியுள்ளார்கள். ஏனைய நாடுகளுடன் பேசி முடிவு எடுப்பார்கள். கூட்டத் தொடரின் இறுதி நாள்களில் வாக்கெடுப்பு நடைபெறும். - எனத் தெரிவித்தார்.

(உ- 100)

## ஜெனிவா பிரேரணை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவுன்சிலின் 51 ஆவது கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான நிலையில், அதற்கு முன்னதாகவே இம்முறை இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துமாறு ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வலியுறுத்த வேண்டுமெனவும் அதற்கேற்றவாறான மிகவும் வலுவான பிரேரணையொன்றை பிரிட்டன் தலைமையிலான இணை அனுசரணை நாடுகள் கொண்டுவரவேண்டுமென்றும் பெரும்பாலான தமிழ்க்கட்சிகள் வலியுறுத்தியிருந்தன.

இணை அனுசரணை நாடுகளால் தயாரிக்கப்பட்டுள்ள புதிய பிரேரணை வரைவு சில தினங்களுக்கு முன்னர் வெளியாகியுள்ள நிலையில், அதன் உள்ளடக்கம் திருப்தியளிக்கும் வகையில் அமைந்துள்ளதா என்று வினவியபோது அதற்கு தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகள் பின்வருமாறு பதிலளித்தனர்.

**சி.வி.விக்னேஸ்வரன்**

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் கூறுகையில் -

பிரேரணையில் நாம் எதிர்பார்த்ததை விடக் குறைந்தளவிலான விடயங்களே உள்ளடக்கப்பட்டுள்ளன.

மிகமுக்கியமாக இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துமாறு வலியுறுத்தப்படுமென எதிர்பார்த்த போதிலும், அவ்விடயம் உள்ளடக்கப்படவில்லை.

அதேபோன்று அரசியல் காரணங்களுக்காகவும் வெறுமனே வாக்குமூலங்களின் அடிப்படையிலும் நீண்டகாலமாக சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தப்படும் என்றும், பயங்கரவாதத்தடைச்சட்டம், காணி அபகரிப்பு மற்றும் இராணுவயமாக்கல் ஆகிய விடயங்கள் தொடர்பில் வலுவான கருத்துக்கள் முன்வைக்கப்படும் என்றும் எதிர்பார்த்தோம். இருப்பினும் அத்தகைய கருத்துக்கள் உள்ளடக்கப்படவில்லை. இப்பிரேரணையில் பல்வேறு விடயங்கள் எமக்குச் சார்பானவையாக அமையாதபோதிலும், கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் புதிதாகக் கொண்டுவரப்படும் ஒவ்வொரு பிரேரணைகளும் சற்று முன்னேற்றகரமானவையாகவே காணப்படுகின்றன.

எனவே இலங்கை தொடர்பில் எதிர்வருங்காலங்களில் கொண்டுவரப்படக் கூடிய பிரேரணைகள் மேலும் காத்திரமான விடயங்களை உள்ளடக்கிய வலுவான பிரேரணைகளாக அமையவேண்டியது அவசியமாகும். -என்று வலியுறுத்தினார்.

(10ஆம் பக்கம் பார்க்க)





# ஆசிரியரைத் தாக்க வவுனியாவில் முயற்சி!

## மாணவன் காயம்

வவுனியாவில் நேற்று இரவு தனியார் கல்வி நிலையத்தில் ஆசிரியர் ஒருவரைத் தாக்கமுற்பட்டமாணவர்களால்ஆசிரியருக்கு அருகில் நின்ற மாணவன் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் தலையில் காயமடைந்த மாணவன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வைரவப்புளியங்குளம் பகுதியில் அமைந்துள்ள தனியார் கல்வி நிலையத்துக்கு முன்பாக ஒன்று கூடிய மாணவர்கள் அங்கு நின்ற மாணவிகளுக்கு தொல்லை கொடுக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டனர்.

இதை அங்கு நின்ற ஆசிரியர் அவதானித்துள்ளதுடன் தனது கல்வி நிலையத்துடன் தொடர்பு அற்ற மாணவர்களை அங்கிருந்து செல்லுமாறும் இவ்வாறு நடந்து கொள்ள வேண்டாம் என்று எச்சரித்த போது திடீரென்று தலைக்கவசத்துடன் நின்ற மாணவர் ஒருவர் அற்த ஆசிரியரை இலக்கு வைத்து தாக்க முற்பட்டபோது அருகில் நின்ற மாணவர் ஒருவர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது தனியார் கல்வி நிலையத்தில் கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்ட 19 வயது மாணவர் காயமடைந்து வைத்தியசாலை விபத்துப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார். இந்தச் சம்பவம் தொடர்பாகக் காயமடைந்த மாணவனின் பெற்றோர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டையும் மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எமது கட்சியின் கொள்கைகளை எதற்காகவும் விட்டுக்கொடோம்!

## சாகர திட்டவட்டக் கருத்து




பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காக மாத்திரமே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குகிறோம். எந்தக் காரணிகளுக்காகவும் கட்சியின் கொள்கையை விட்டுக்கொடுக்கமாட்டோம்.

பொதுஜன பெரமுன ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைக்கவுள்ளதாக வெளியாகியுள்ள செய்தி அடிப்படையற்றதாகும். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் உறுப்பினரையே களமிறக்குவோம் என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஸ்ரீ லங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியில் ஒன்றிணைந்த அரசியல் கட்சிகள் கொள்கை அடிப்படையில் செயற்படவில்லை.

மாறாகத் தங்களின் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக செயற்பட்டதால் அரசாங்கத்தை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை.

ஆளும் தரப்பில் இருந்து விலகி நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்படும் தரப்பினர்களின் அரசியல் பின்புலத்தை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். மேலவை இலங்கை கூட்டணி, மக்கள் சுதந்திர காங்கிரஸ் ஆகிய புதிய தோற்றங்கள் பொதுஜன பெரமுனவுக்கு ஒரு சவாலல்ல,

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கியுள்ளோம்.

பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில் சர்வகட்சி அரசாங்கத்தில் ஒன்றிணையுமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்க்கட்சிக்கு பலமுறை அழைப்பு விடுத்தும், அவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. சவால்களைப் பொறுப்பேற்க எதிர்த்தரப்பினர் தயாராக இருக்கவில்லை.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஐக்கிய தேசிய கட்சியுடன் கூட்டணி அமைக்கப் போவதாக வெளியாகியுள்ள செய்தி அடிப்படையற்றதாகும்.

எதிர்வரும் காலங்களில் இடம்பெறும் தேர்தல்களில் பொதுஜன பெரமுன மொட்டு சின்னத்தை முன்னிலைப்படுத்தியே தேர்தலில் போட்டியிடும் என்பதை உறுதியாகக் குறிப்பிடமுடியும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் அரசியலில் ஈடுபடுகின்றமை தொடர்பாக இதுவரை எவ்வித உத்தியோகபூர்வமான தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள கட்சி மாநாட்டின் போது முக்கிய பல தீர்மானங்கள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும். – என்றார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இந்தியாவின் நிலைப்பாடு

**ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் தற்போதைய 51 ஆவதுக்கூட்டத்தொடரின் ஆரம்பத்தில் கடந்த திங்களன்று, இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சமர்ப்பித்த வாய் மூல அறிக்கை மீதான விவாதம் நடைபெற்றது.**

**அதில், இலங்கையில் அதிகாரப் பகிர்வு விடயங்கள் தொடர்பில் இந்தியப் பிரதிநிதி தெரிவித்த கருத்து சம்பந்தமாக இலங்கை தமிழர் தரப்புகளிடையே சற்று சலசலப்பும் குழப்பமும் ஏற்பட்டமை உண்மைதான்.**

**யுத்தம் முடிந்து 13 ஆண்டுகளாகியும், இலங்கையில் அதிகாரப் பகிர்வை முன்னெடுப்பதில் இலங்கை அரசு காத்திரமான எந்த நடவடிக்கையையும் எடுக்கவே இல்லை என்ற இந்திய தரப்பின் ஆணித்தரமான கூற்று ஈழத் தமிழர்களினால் பெரிதும் வரவேற்கப்பட்டது. அது நிச்சயம் கொழும்பை பெரும் பின்னடைவிலும் அதிருப்தியிலும் குழப்பத்திலும் ஆழ்த்தி இருக்கும் என்பது உறுதி.**

**ஆனால் அதற்கு அப்பால் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் இந்தியத் தரப்புப் பிரதிநிதி தெரிவித்த கருத்து தமிழ் மக்கள் மனதைத் துணுக்குற வைத்தது என்பது உண்மைதான்.**

**அரசமைப்பின் 13 ஆவது திருத்தம், மாகாண சபை தேர்தல் குறித்தெல்லாம் அவர் பேசிய போது மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிவிட்டதோ என்று பல தமிழ் ஆர்வலர்கள் சஞ்சலப்பட்டனர்.**

**கடந்த மார்ச்சில், முன்னைய கூட்டத் தொடரில் தமிழ் மக்களின் சட்டபூர்வமான அபிலாசைகளை நிறைவு செய்யும் அதிகாரப் பரவலாக்கள் குறித்து பிரஸ்தாபித்து வலியுறுத்திய இந்தியா, மீண்டும் 13 ஆவது திருத்தம் என்ற பழைய பல்லவியுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வை முடித்துக் கட்ட தீர்மானித்து விட்டதோ என்று குழம்பாதவர்கள் இல்லை.**

**ஆனால் விவகாரத்தை அப்படித் தவறாக வியாக்கியானம் செய்து பார்க்கத் தேவையில்லை, வேறுவிதமாக அர்த்தம் கொண்டு அதனை பார்க்க வேண்டும் என்று நேற்று விளக்கம் அளித்திருக்கின்றார் சுமந்திரன்.**

**“ஐ.நாவில் இந்தியாவின் கூற்றிலே, இலங்கையில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு ஒன்றை கொடுப்பதில் இலங்கை அரசாங்கம் கால இழுத்தடிப்பு ஒன்றைச் செய்து வருகின்றது என்று சொல்லியிருக்கிறார்கள். 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது உள்ளடங்கலாக அதிகாரப் பகிர்வு செய்யப்பட வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே 13 ஆம் திருத்தச் சட்டத்துடன் இந்த விடயம் நிறைவுக்கு வருகிறது என அவர்கள் சொல்லவில்லை. எனவே, அந்த நிலைப்பாடு நல்ல நிலைப்பாடு. முதல் படியாக 13 ஆவது திருத்தத்தை அமுல்படுவத்துவதாக இருந்தாலும் அதனைச் செய்யட்டும். ஆனால் அது தீர்வல்ல. அரசியல் தீர்வு என்பது ஒரு சமஷ்டிக் கட்டமைப்பிலான ஓர் அதிகார பகிர்வு. அது அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும். அத்தகைய அதிகாரப் பகிர்வையே ஏற்றுக் கொள்வோம். இந்தியாவும் அந்த நிலைப்பாட்டிலேயே உள்ளது.”**

**– இப்படித் தெளிவுபடுத்தி இருக்கிறார் சுமந்திரன்.**

**ஜெனிவா அமர்வு தொடர்பில் இந்தியா மீது தமிழர்களுக்கு எழுந்திருக்கும் கசப்புணர்வை இந்த விளக்கம் ஓரளவு நீக்கி இருக்கும் என்று கருதலாம்.**

# இலங்கை – இந்திய இராஜதந்திரத் தொடர்புகள்; இருநாடுகளுக்கும் நல்லுறவு மேலும் வலுவாக்கும்!

### 100 ஆவது வருடபூர்த்தியில் நிச்சயம் என்கிறார் கோபால் பாக்லே

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான இராஜதந்திரத்தொடர்புகள் ஆரம்பமாகி 75 வருடங்கள் பூர்த்தியடைந்திருப்பதாகவும், இருநாடுகளும் சுதந்திரமடைந்து 100 ஆவது வருடம் பூர்த்தியடையும் வேளையிலும் இருநாடுகளுக்கும் இடையிலான நல்லுறவு மிகவும் வலுவானதாகக் காணப்படும் என்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.



இந்தியா சுதந்திரமடைந்து 75 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளமையை நினைவுகூரும் விதமாக இலங்கை – இந்திய அமைப்பால் கொழும்பிலுள்ள தாஜ் சமுத்ரா ஹோட்டலில் இராப்போசன விருந்துபசார நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இந்திய உயர்ஸ்தானிகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை – இந்திய அமைப்பானது கடந்த 1949 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இருநாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை வலுப்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று சுட்டிக்காட்டிய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, இம்முறை இந்தியா 75 ஆவது சுதந்திரதினத்தைக் கொண்டாடுவதைப்போன்று அடுத்த வருடம் இலங்கை சுதந்திரமடைந்து 75 வருடங்கள் பூர்த்தியடைகின்றது.

எனவே அதனை மற்றொரு விதமாகக் கூறுவதெனில், இருநாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திரத்தொடர்புகள் வலுவடைந்து 75 வருடங்களாகின்றன என்றும் குறிப்பிட்டார்.

1947 ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரமடைந்தபோது ஒருமைப்பாட்டையும் சுயாட்சியையும் நிலைநிறுத்துவதை முன்னிறுத்தி இயங்கவேண்டியிருந்த போதிலும், இப்போது இந்தியா நீண்ட தூரத்தைக் கடந்து வந்துவிட்டது.

எனவே அடுத்தகட்டமாக 2047 ஆம் ஆண்டாகும்போது இலங்கையும் இந்தியாவும் எவ்வாறிருக்கும், எவ்வாறிருக்கவேண்டும் என்பது தொடர்பாகச் சிந்திக்கவேண்டும் என்று இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே மேலும் தெரிவித்தார்.

அதேவேளை இருநாடுகளும் சுதந்திரமடைந்து 100 ஆவது வருடம் பூர்த்தியடைகின்ற வேளையிலும் இருநாடுகளுக்கும் இடையிலான நல்லுறவு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இதுஇவ்வாறிருக்க இந்நிகழ்வில் வரவேற்புரையாற்றிய இலங்கை – இந்திய அமைப்பின் தலைவர் கிரோர் ரெட்டி, இருநாடுகளுக்கும் இடையில் நீண்டகாலமாக நிலவிவரும் அரசியல், பொருளாதார, சமூக, மொழியியல், பாரம்பரிய, கலாசாரத்தொடர்புகள் தொடர்பாக நினைவுகூர்ந்ததுடன் இருநாடுகளும் ஒன்றிணைந்து பணியாற்றவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விஷம் கலந்த அரிசி குறித்த செய்தி உண்மையில்லையாம்!

### பூச்சிக்கொல்லி பதிவு அலுவலக பதில் பதிவாளர் மறுப்பு

விஷம் கலந்த அரிசி இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதாக ஞாயிறு சிங்கள நாளிதழ்களில் வெளியாகியுள்ள செய்தி முற்றிலும்பொய்யானதுஎனபூச்சிக்கொல்லி பதிவு அலுவலகத்தின் பதில் பதிவாளர் லசந்த ரத்னவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரை பூச்சிக்கொல்லி பதிவேட்டு அலுவலகத்தால் அவ்வாறான ஆய்வு முடிவுகள் எவையும் பதிவு செய்யப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

2017 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஆய்வொன்றை மையப்படுத்தி, குறித்த செய்தித்தாள்கள் செய்திகளை எழுதியுள்ளன. எனினும், இந்தச் செய்திகளின் உள்ளடக்கங்களில் குறைபாடுகள் உள்ளன எனவும் ரத்னவீர கூறுகின்றார்.

இவ்வாறான பொய்யான செய்திகள் மூலம் பொதுமக்கள் மத்தியில் பீதி ஏற்படக் கூடும்என்பதால், இவ்வாறானவிடயங்களை எழுதும்போது உரிய தரப்பினரிடம், சரியான தகவல்களைப் பெற்று, உறுதி செய்து கொள்வது மிகவும் பொருத்தமானது எனவும் பூச்சிக்கொல்லி பதிவு அலுவலகத்தின் பதில் பதிவாளர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த ரத்னவீர –

இது 2017 ஆம் ஆண்டு கண்டி பிரதேசத்தில் 68 மாதிரிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவுகளை அடிப்படையாக வைத்து இந்தச் செய்தி எழுதப்பட்டுள்ளது. ஆனால், இந்த ஆய்வுத் தகவல்களும் தவறாகப் பதிவாகியிருக்கின்றன என்று ரத்னவீர சுட்டிக்காட்டியுள்ளார்.

வெற்று உலோகத் துகள்கள் பொதுவாக சிறிய அளவில் இருப்பதால், அவை பத்து லட்சத்தில் ஒரு பங்காகவே அளவிடப்படுகின்றன. ஆனால், அந்த வெற்று உலோகங்கள் நூற்றுக்கு ஒரு பங்கு வீதத்தில் இருப்பதாக இந்தப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாகப் பூச்சிக்கொல்லி பதிவாளர் நாயகம் கூறுகையில் –

உலகில் எங்கும் சதவீதத்தில் வெற்று உலோகத்துகள்கள் இருப்பதாக கண்டறியப்படவில்லை. அது நடைமுறையில் இல்லை. முறையான ஆய்வுகள் இன்றி இந்த ஆய்வு அறிக்கை பதிவாகியுள்ளது.

தவறான கருத்துகளைப் பிரதிபலிக்கும் வகையில் தகவல்களை வெளியிடுவது பொதுமக்களுக்கு இடையூறாக மாறிவிடும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் முதல் நடத்தப்பட்ட சோதனைகளின் மூலம் இவ்வாறான எந்தவொரு முடிவுகளும் பதியப்படவில்லை என்றும் அவ்வாறு இருக்கும் பட்சத்தில் இப்படியான செய்திகளை வெளியிடுவது அடிப்படையற்றது என்றும் தெரிவித்தார்.

தவறான ஆதாரங்களுடன், வெளியிடப்பட்டுள்ள இந்தச் செய்திகள் மூலம் பொதுமக்களை தவறாக வழிநடத்தும் இந்த செயற்பாடு தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறையிட நடவடிக்கை எடுத்து வருவதாகவும், வர்த்தக மற்றும் உணவுப்பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிசிர கொடிகார தெரிவித்துள்ளார் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிக்கை வெளியிட்டுள்ளது.

# மீன் உணவுகளை தவிர்க்கும் மக்கள்!

பொதுமக்கள் தற்போது பெரிதளவில் மீன்களைக் கொள்வனவு செய்வதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தையில் மீன்களின் விலை குறைந்துள்ள போதிலும், நுகர்வோர் கொள்வனவு செய்யாத நிலை காணப்படுவதாக வியாபாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர். பேலியகொடை மீன் வர்த்தக நிலையத்தில் சாலயா போன்ற சில வகை மீன்களின் விலை குறைவடைந்துள்ளது. எனினும், மீன்களை கொள்வனவு செய்வதில் பொதுமக்கள் ஆர்வம்காட்டுவதில்லைஎனத்தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கோழி இறைச்சியின் விலை மேலும் அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் மற்றும் நுகர்வோர் குற்றஞ்சாட்டுகின்றனர். தற்போது ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலை 1,600 ரூபாவாக உள்ளது.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# சிந்து நதியின் மீது வாகனங்கள் செல்ல பாலம் அமைத்த ராணுவம்

இந்தியப் பாதுகாப்புப் படைகளின் மற்றொரு சிறப்பம்சமாக, சிந்து ஆற்றின் குறுக்கே துருப்புக்கள் பாலம் கட்டுவதைச் சித்தரித்த காணொலி வெளியானமைக்குப் பிறகு, இந்திய இராணுவத்தின் ஈர்க்கக்கூடிய பொறியியல் திறன்கள் ஞாயிற்றுக்கிழமை வெளிச்சத்திற்கு வந்தன.

'தரைப் பரப்பு அல்லது கடக்க முடியாத உயரங்களையும் தாண்டி இணைக்கும் சவால்கள்' – என்ற தலைப்பில் அந்த வீடியோவை இந்திய இராணுவத்தின் தென்மேற்குக் கட்டளை ட்விட்டரில் பகிர்ந்துள்ளது.

கிழக்கு லடாக்கில் உள்ள சப்த சக்தி பொறியாளர்கள் இந்த பயிற்சியை மேற்கொண்டனர்.

பாலம் கட்டுவது என்பது நகர்வு இயக்கத்தை உறுதிப்படுத்துவது மற்றும் பயிற்சிகளை மேற்கொள்வதையும் உள்ளடக்கியது.

“கிழக்கு லடாக்கில் உள்ள சப்தசக்தி பொறியாளர்கள் நகர்வியக்கம் மற்றும் பயிற்சிகளை 'தரைப் பரப்பு அல்லது கடக்க முடியாத உயரங்களையும் தாண்டி இணைக்கும் சவால்கள்' – திட்டத்தின் கீழ் மேற்கொள்கின்றனர். வலிமைமிக்க சிந்து நதியின் பாலம், போர் மற்றும் தளவாட அமைப்புகளின் நகர்வியக்கத்தை செயல்படுத்





துகிறது – என்று இந்திய இராணுவத்தின் தென்மேற்கு கட்டளை ட்வீட் செய்தது.

வீடியோவின் முடிவில் பாலம் முடிவடைந்ததாகக் காட்டப்படும்போது, கனரக உலோகப் பாகங்களை நீர் நிலைக்குள் இயந்திரத்தனமாக செலுத்துவதை வீடியோ சித்திரிக்கிறது.

பாலம் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்ட பிறகு கனரக ட்ரக்குகள் நிலப்பரப்பைக் கடக்கும் போது இராணுவ வீரர்கள் குழுப்பணியில் ஈடுபட்டிருப்பதைக் காணலாம்.

முன்னதாக ஞாயிற்றுக்கிழமை (11 ஆம் திகதி) லடாக் செக்டருக்கு இரண்டு நாள் பயணமாக வந்த இந்திய இராணுவ தளபதி மனோஜ் பாண்டே, இந்திய விமானப் படையின் அப்பாச்சி தாக்குதல் ஹெலிக்கொப்டரில் பறந்தார்.

லடாக் விமான தளத்தில் இருந்து நேற்றும்(ஞாயிறும்),இன்றும்(திங்களும்) இராணுவ தளபதி ஹெலிக்கொப்டரில் பறந்து சென்றார் என இந்திய விமானப் படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஜெனரல் பாண்டே பாலத்தின் ஹெலி மேடையின்



பறக்கும் பண்புகள் குறித்து நன்கு பரிச்சயப்பட்டிருந்தார். அத்தோடு அதன் திறன்கள் மற்றும் பாத்திரங்களைப் பற்றி விளக்கினார்.

கிழக்கு லடாக்கில் உள்ள உண்மையான கட்டுப்பாட்டுக் கோடு வழியாக சீனாவுடனான இராணுவ மோதலின் தொடக்கத்திலிருந்து அப்பாச்சி ஹெலிக்கொப்டர் லடாக் செக்டாரில் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்திய விமானப்படையிடம் இந்த அமெரிக்க தயாரிப்பு ரகத்தைச் சேர்ந்த 22 தாக்குதல் ஹெலிக்கொப்டர்கள் உள்ளன, அதேநேரத்தில் இந்திய இராணுவம் அதன் சொந்தமாக ஆறு ஹெலிக்கொப்டர்களைப் பெற உள்ளது.

இராணுவ விமானப் போக்குவரத்து இயக்குநர் ஜெனரல் தலைமையில் பயிற்சி நோக்கங்களுக்காக இந்தியஈராணுவக் குழுக்களும் அமெரிக்காவில் தங்கிப் பயிற்சி பெற்றன.

எவ்வாறாயினும், எதிர்காலத்தில் இராணுவத்தின் முக்கிய அம்சமாக ஹிந்துஸ்தான் ஏரோநோட்டிகல் லிமிட்டெட்டால் உருவாக்கப்பட்ட உள்நாட்டு இலகுரக போர் ஹெலிக்கொப்டர்கள் இருக்கும்.

இராணுவத் தளபதி சனிக்கிழமை முதல் லடாக் செக்டரில் இருந்தார், அங்கு ரோந்துப் புள்ளி 15 க்கு அருகிலுள்ள கோக்ரா ஹைட்ஸ் ஹாட் ஸ்பிரிங்ஸ் பகுதியில் தொடர்ந்து மோதல் தவிர்ப்பு விலக்கலின் போது அவர் முன்னோக்கிப் பகுதிகளுக்குச் சென்றார்.

முன்னதாக சனிக்கிழமையன்று, தனது பயணத்தின் போது, ஜெனரல் பாண்டே, பர்வத் பிரஹார் என்ற குறியீட்டுப் பெயரிடப்பட்ட போர் விளையாட்டுகளைப் பார்த்தார். மேலும் தரைத் தளபதிகளால் செயல்பாட்டுத் தயார்நிலை குறித்து அவருக்கு விளக்கப்பட்டதாக இந்திய இராணுவம் தெரிவித்தது.

அவர்துருப்புக்களுடன்உரையாடினார்.அவர்களின் உறுதிப்பாடு மற்றும் தொழில்முறை தரத்திற்காக அவர்களைப் பாராட்டினார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

2020 மே மாதத்திற்குப் பிறகு கட்டுப்பாடு எல்லைக் கோட்டில் உருவாக்கப்பட்ட சிக்கல்களைத் தீர்க்கும் நோக்கில், கிழக்கு லடாக்கில் உள்ள கட்டுப்பாடு எல்லைக் கோட்டின் கோக்ரா – ஹாட் ஸ்பிரிங்ஸ் (PP – 15) பகுதியில் உருவாக்கப்பட்ட தற்காலிக கட்டமைப்புகள் மற்றும்பிறஅதனுடன்இணைந்தஉள்கட்டமைப்புகளை அகற்றி சரிபார்க்க இந்தியாவும் சீனாவும் ஒப்புக் கொண்டுள்ளன என இந்தியச் வெளியுறவு அமைச்சகம் வெள்ளிக்கிழமை கூறியிருந்தது. (ANI)

(மூலம்:ஏ.என்.ஐ.)

# இந்தியா – வங்காளதேச இரு தரப்பு உறவுகள் வலுவடையும் என ஜனாதிபதி முர்மு நம்பிக்கை

வங்காளதேசத்திற்கும் இந்தியாவிற்கும் இடையிலான வரலாற்றுச் சிறப்புமிக்க பந்தத்தை எடுத்துரைத்த இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு, நல்லெண்ணம், நம்பிக்கை, புரிந்துணர்வு மற்றும் பரஸ்பர மரியாதை ஆகியவற்றின் அடிப்படையில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் வரும் நாள்களில் மேலும் வலுவடையும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தியாவுக்கான பங்களாதேஷ் உயர் ஸ்தானிகர் முஹம்மது இம்ரானை செவ்வாய்கிழமை அவரது அலுவலகமான ராஷ்டிரபதி பவனில் சந்தித்த போது இந்திய ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

சந்திப்பின் போது, உயர்ஸ்தானிகர் வங்காளதேச ஜனாதிபதி மற்றும் பிரதமரின் வாழ்த்துக்களையும் அன்பான வணக்கங்களையும் தெரிவித்தார்.

பிரதமர் ஷேக் ஹசீனாவின் சமீபத்திய இந்தியா பயணம் உட்பட இருதரப்பு ஒத்துழைப்பின் பல்வேறு பிரச்சினைகள் குறித்து அவர்கள் விவாதித்தனர்.

பிரதமர் ஷேக் ஹசீனாவின் விஜயம் வங்காளதேசத்திற்கும் இந்தியாவிற்கும் இடையே இருக்கும் உறவுகளை மேலும் பலப்படுத்தியுள்ளது என்று பங்களாதேஷ்





உயர் ஸ்தானிகராலயம் ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது.

வெளியேறும் தூதர், தனது பதவிக்காலத்தில் தமக்கு அளித்த ஆதரவிற்கு இந்திய அரசுக்கும் மக்களுக்கும் நன்றி தெரிவித்தார். பங்களாதேஷுக்கு விஜயம் செய்யுமாறும் அவர் ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்தார்.

இந்திய ஜனாதிபதி தனது வசதிக்கேற்ப வங்கதேசத்திற்கு விஜயம் செய்ய முடியும் என்று பதவிக் காலம் முடித்து வெளியேறும் உயர் ஸ்தானிகர், நம்பிக்கை தெரிவித்தார்.

உயர் ஸ்தானிகரின் பதவிக் காலத்தில் அவர் ஆற்றிய பங்கிற்காக இந்தியக் குடியரசுத் தலைவர் அவரைப் பாராட்டினார், மேலும் வரும் நாள்களில் அனைத்து வெற்றிகளையும் பெற வாழ்த்தினார்.

# கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முல்லைத்தீவு மாவட்டத்துக்குக் கள விஜயம்!





முல்லைத்தீவு மாவட்டத்துக்கு பயணம் மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு இடங்களை பார்வையிட்டுள்ளதுடன் மாவட்ட கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலும் கேட்டறிந்துகொண்டார்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் –

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வளங்களை எவ்வாறு அபிவிருத்தி செய்து மக்களின் வாழ்வாதாரத்தை பெருக்கலாம் என்பது தொடர்பில் நேரடியாக கள விஜயம் மேற்கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மாவட்ட கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டு சில முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத தொழிலால் பாதிக்கப்படுகின்ற மக்களின் பிரச்சினைகள் ஆராயப்பட்டு சில முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. ஒரு முன்னேற்றத்தை நோக்கிய முடிவுகள் எட்டப்பட்டுள்ளது.

கடற்றொழிலாளர்களின் எரிபொருள் பிரச்சினை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மீனவர்களுக்கான எரிபொருளை வழங்கி வருகின்றது.

மீனவர்களின் தொழில் நடவடிக்கையில் மாற்றுத் தீர்மானம் தொடர்பில் யோசித்துள்ளோம். நீர்வேளாண்மையான கடல் அட்டை வளர்ப்பது, இறால் வளர்ப்பது, கூடுகளுக்குள் மீன் வளர்ப்பது என்பன உள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள களப்புகளை ஆராய்ந்துள்ளோம்.களப்புகளை அபிவிருத்தி செய்தால் இங்குள்ள மக்களுக்கு எரிபொருள் இல்லாவிட்டாலும் அதில் அவர்கள் தொழில் செய்யக்கூடியவாறு இருக்கும்.

வட்டுவாகல், சாலை, நாயாறு, கொக்குளாய் கடல் நீர் ஏரிகளை பார்வையிட்டு மாற்றங்களை கொண்டு வருவதற்கான முடிவு எடுக்கப்பட்டு எதிர்வரும் வரவு செலவுத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டு அடுத்த ஆண்டு மாசி, பங்குனியில் அந்த வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்க முடியாமல் தமது குடும்பத்தை எவ்வாறாயினும் பாதுகாத்துக்கொள்வதற்காக நாட்டில் இருந்து வெளிநாடு செல்வதற்காக இந்தியாவின் கர்நாடகா மாநிலத்தில் பெங்களூரில் வைத்து கைது செய்யப்பட்ட 38 பேரையும் விடுவிக்குமாறு அவர்களது உறவினர்கள் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## முதலைத் தாக்குதலுக்கு இலக்காகி திருமலை மீனவர் வைத்தியசாலையில்!

*திருகோணமலை - நிலாவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் மீன்பிடிக்க சென்ற மீனவரொருவர் முதலை தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.*

*நிலாவெளி, பெரியகுளம் குளத்துக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவரை முதலை பிடித்துள்ளது. இதன்போது காயமடைந்த மீனவர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.*

*இவ்வாறு முதலை கடிக்கு உள்ளானவர் நிலாவெளி பெரியகுளம் பகுதியைச் சேர்ந்த 49 வயதுடையவர் எனவும் தெரிய வருகின்றது.*




## கைதிகளின் எண்ணிக்கை நாட்டில் சடுதியாக அதிகரிப்பு

*இந்த நாட்டின் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்படக்கூடிய மொத்த கைதிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் தற்போது சிறைச்சாலையில் உள்ளவர்களின் எண்ணிக்கை சுமார் 180 வீதத்தால் அதிகரித்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.*

*2022ஆம் ஆண்டின் ஆரம்பத்துடன் கைதிகளின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் கட்டுப்பாடு மற்றும் புனர்வாழ்வு ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.*

*இந்த நிலை சில சிறைச்சாலைகளில் 200 மற்றும் 300 வீதமாக அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*24 ஆயிரம் பேர் தற்போது சிறைச்சாலையில் உள்ளனர், இருப்பினும் இலங்கையில் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்படக்கூடிய மொத்த கைதிகளின் எண்ணிக்கை சுமார் 13 ஆயிரத்து 200 ஆகும்.*

*அவர்களில், அதிக எண்ணிக்கையிலானவர்கள் சந்தேக நபர்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களில் சுமார் 7 ஆயிரத்து 500 பேர் போதைப்பொருள் குற்றச்சாட்டின் கீழ் சிறையில் உள்ளனர் எனவும் சிறைச்சாலைகள் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.*

*சிறைச்சாலையில் உள்ளவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு அவர்களின் உணவுக்காக அரசாங்கம் சுமார் 400 கோடியே 70 லட்சம் ரூபாவை செலவிட நேரிடும் என சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.*

## ஆசியகிண்ண வெற்றியின் நன்மதிப்பைபெற நாமல் முயற்சித்தமை கோலிக்கூத்தாகும்!

### *லக்ஷ்மன் கிரியெல்ல காட்டம்*




2021 ஆம் ஆண்டு டுபாயில் நடைபெற்ற உலகக்கிண்ண டி20 போட்டியில் இலங்கை அணியை நாசப்படுத்திய நிலையில், ஆசியக் கிண்ண வெற்றியின் நன்மதிப்பை பெறநாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ முயற்சித்தமை கேலிக் கூத்தாகும் என எதிர்க்கட்சி பிரதம அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

2021 ஜூலை முதல் ஒழுக்காற்று அடிப்படையில் குசல் மெண்டிஸ், தனுஷ்க குணதிலக மற்றும் நிரோன் டிக்வெல்ல ஆகியோரை ஒரு வருடத்துக்கு ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபை இடைநீக்கம் செய்துள்ளது.எனினும் இந்த மூன்று பேரும், சிறப்பாக விளையாடக்கூடியவர்கள் என்ற அடிப்படையில், 2021, டி 20 உலகக்கிண்ண அணி தெரிவின் போது, இலங்கையின் ஆயிரக்கணக்கான கிரிக்கெட் ஆர்வலர்கள் சார்பில் அப்போதைய விளையாட்டு அமைச்சர் நாமல் ராஜபக்ஷவிடம் தாம், குறித்த மூவரின் தடைகளை நீக்குமாறு கோரிக்கை வைத்த போதும், அவர் ஒழுக்கத்தை காரணம் காட்டி, கோரிக்கையைத் திட்டவட்டமாக நிராகரித்தார்.

இதன் விளைவு ஆஸ்திரேலியா, இங்கிலாந்துமற்றும்தென்னாபிரிக்கா அணிகளிடம் கடும் தோல்வியடைந்து இலங்கை அணி முதல் சுற்றிலேயே வெளியேறியது என்று லக்ஷ்மன் கிரியெல்ல சுட்டிக்காட்டியுள்ளார்.

# நுட்பியல் அவத்தை





ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் - தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வளர்ந்து வரும் நுட்பியல் அவத்தையில் பல்வேறு மாற்றங்கள் மிக வேகமாக நடைபெற்று வருகின்றன. வங்கிகளுக்கு சென்று பணப்பரிமாற்றங்களைச் செய்து வந்தவர்கள், தற்போது இணையத்தினூடாக வங்கிபரிமாற்றங்களை செய்துவருகின்றனர். வீட்டிலிருந்து கொண்டே எந்த நேரத்திலும் எங்குவேண்டுமானாலும் பணத்தினை அனுப்ப முடியும் என்ற நிலை வந்துள்ளது. இந்த வசதியை பெறுவதற்கு தேவைப்படுவது பரிமாற்றத்தில் ஈடுபடும் இருவருக்கும் ஒரு வங்கி கணக்கு இருக்க வேண்டும். இதில் வங்கி இடைத்தரகராகச் செயல்பட்டு இந்தப்பணப்பரிமாற்றத்தினைச் செய்கிறது. இப்பரிமாற்றத்தில் எமது பணத்தினை இடையில் வங்கியிடமோ அல்லது அதற்கு நிகரான ஒருவரிடமோ முழுமையாக ஒப்படைக்கிறோம். இவ்வாறில்லாது பணத்தினை வங்கி அல்லது இடைத்தரகர்கள் இல்லாது அனுப்ப முடிந்தால் பல சிக்கல்களைத் தவிர்க்க முடியும். இதற்கு பயன்படுத்தப்படுவது தான் block chain தொழில்நுட்பமாகும்.10 இந்த தொழில்நுட்பமானது நம்முடைய தகவல்களை மிக பாதுகாப்பாக அனுப்ப பயன்படுகிறது எனலாம். அதாவது ஒருவரின் தகவல்கள் ஒரு block ஆக உருவாக்கபடும் இது ஒரு சங்கிலித்தொடர்போல ஒன்றுடன் ஒன்றுடன் இணைக்கபட்டிருக்கும். இந்த block chain ஐ உருவாக்க cryptography மற்றும் hashing போன்ற ஒரு சில முக்கியமான கோட்பாடுகளும் பின்பற்றப்படுகின்றன.

Blockchain (கட்டச்சங்கிலி) என்னும் இந்த தொழில்நுட்பத்தை (2008இல்) கண்டுபிடித்தவர் ஜப்பானிய நாட்டைச் சேர்ந்த சத்தோசி நகமோட்டோ (Satoshi Nakamoto) என்ற பெயரால் அழைக்கப்படுபவர். Blockchain என்பது ஒரு புதிய வகை தரவுத்தள அமைப்பு ஆகும். இது தரவுத்தளங்களின் வலையமைப்பாகும், இது பங்கேற்பாளர்களுக்கு தகவல்களை உருவாக்கவும், பரப்பவும் மற்றும் சேமிக்கவும் உதவுகிறது. பெரும்பாலான மையப்படுத்தப்பட்ட அமைப்புகளைப் போலல்லாமல், தரவு பரவலாக்கப்பட்ட முறையில் சேமிக்கப்படுகிறது, பிளாக்செயின் ஒவ்வொரு பரிவர்த்தனை அல்லது பரிமாற்றத்தையும் திறமையாகவும் பாதுகாப்பாகவும் பதிவு செய்கிறது, இது ஒரு பெரிய தளத்தை உருவாக்குகிறது. பிளாக்செயின் தொழில்நுட்பம் திறமையான கண்காணிப்பு, தடமறிதல் மற்றும் தணிக்கை ஆகியவற்றை செயல்படுத்துகிறது.

பொதுவாக இணையத்தில் காணப்படும் தரவுகள் பாதுகாப்பு குறைவாகக் காணப்படுகின்றன. இணையத்தில் தகவல் பாதுகாப்பை கருத்தில் கொண்டு




உருவாக்கப்பட்ட தொழில்நுட்பம் blockchain ஆகும். இதில் பதிவுகளை மாற்றுவது, ஹேக் (hack) செய்வது அல்லது ஏமாற்றுவது கடினம் அல்லது சாத்தியமற்றது. பிளாக்செயின் என்பது பொதுவாக பணப் பரிமாற்றங்களின் டிஜிற்றல் லெட்ஜர் ஆகும், இது பிளாக்செயினில் உள்ள கணினி அமைப்புகளின் முழு நெட்வொர்க்கிலும் நகல் செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. இது ஒரு வணிக நெட்வொர்க்கில் பரிவர்த்தனைகளை பதிவு செய்வதற்கும் சொத்துக்களை கண்காணிப்பதற்கும் உ.தவுகிறது

⁎ Blockchain என்பது ஒரு பகிரப்பட்ட தரவுத்தளமாகும். பொதுவான தகவல்களைச் சேமிக்கும் விதத்தில் இது தரவுத்தளத்திலிருந்து வேறுபடுகின்றது.

⁎ புதிய தரவு வரும்போது, அது ஒரு புதிய தொகுதிக்குள் நுழைகிறது. பிளாக் (Block) தரவுகளால் நிரப்பப்பட்டவுடன், அது முந்தைய தொகுதியுடன் இணைக்கப்பட்டுள்ளது, இது தரவுகளை காலவரிசைப்படி ஒன்றாக இணைக்கிறது.

⁎ பல்வேறு வகையான தகவல்களை ஒரு பிளாக் செயினில் சேமிக்க முடியும், ஆனால் இதுவரை மிகவும் பொதுவான பயன்பாடு பரிவர்த்தனைகளுக்கான லெட்ஜராக இருக்கிறது.

⁎ பரவலாக்கப்பட்ட பிளாக்செயின்கள் மாறாதவை, அதாவது உள்ளிடப்பட்ட தரவு மாற்ற முடியாதது.


பிளாக்செயினின் குறிக்கோள் டிஜிட்டல் தகவல்களைப் பதிவுசெய்து விநியோகிக்க அனுமதிப்பது ஆகும். இதனை திருத்த முடியாதது. இந்த வழியில், ஒரு பிளாக்செயினில் மாறாத லெட்ஜர்கள் அல்லது பரிவர்த்தனைகளின் பதிவுகளை மாற்றவோ, நீக்கவோ அல்லது அழிக்கவோ முடியாது. இது, பிளாக் செயின்கள் விநியோகிக்கப்பட்ட லெட்ஜர் தொழில்நுட்பம் (Distributed Ledger Technology, DLT) என்றும் அழைக்கப்படுகின்றன.

பிளாக்செயின் என்பது பல கட்டங்களால் ஆனது. தகவல்கள் ஒவ்வொரு கட்டத்திலும் எழுதப்பட்டு, அவை சங்கிலிபோல இணைக்கப் பட்டிருக்கும். சங்கிலி இணைப்பு போன்ற இந்த அமைப்பில் தேதி, நேரம், போன்றவையும் குறியாக்க வடிவில் சேமித்து வைக்கப்படும். ஏதாவதொரு தகவலை அழிப்பதோ, அல்லது மாற்றுவதோ இதில் கடினமானது. ஒவ்வொரு தகவல் பரிமாற்றமும் வலையமைப்புக் கணுக்கள் (network nodes) மூலமாகவும், பராமரிப்பாளர்கள் வாயிலாகவும் சரிபார்க்கப்படும்.

எடுத்துக்காட்டாக, ஒருவரிடம் இருந்து மற்றொருவருக்கு இடத்தை விற்கிறோம் தருகிறோம் என்றால், ஒருமுறை விற்ற பின், நம்முடைய கணக்கிலிருந்து அந்த இடம் சென்றுவிடும். இதனை கணுக்களும், பராமரிப்பாளர்களும் உறுதி செய்வார்கள். இடம் யாருக்கு சொந்தம், எப்போது பரிமாற்றம் நடந்தது, போன்றவற்றை அதிநவீன கணினி மூலமாக, கணித கோட்பாடுகளையும், சமன்பாடுகளையும் சமாளித்து விடையாக அந்த உறுதி அமையும். இவ்வாறு பரிமாற்றம் உறுதிசெய்த பின், மறுமுறை அதே இடத்தை வேறொருவருக்குக் கொடுக்க இயலாது.

இந்த blockchain தொழில்நுட்பம் பல்வேறு துறைகளில் மாற்றத்தை ஏற்படுத்தும்.

தேர்தல் முறைமை
காணி பதிவு
காப்புறுதி
மருத்துவம்
வங்கி முறைமை போன்றவற்றில் எதிர்காலத்தில் மாற்றங்களை ஏற்படுத்தவல்லது.



காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## தந்திரங்களும் அவதந்திரங்களும்




- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 127**

இந்தியப் படைகள்– ஆக்கிரமிப்பு படைகள் எனவும், அவை வெளியேற வேண்டும் எனவும் பிரசாரம் முன்னெடுக்கப்பட்ட காலங்களில், பொதுநலவாய நாடுகளின் கூட்டம் ஒன்றுக்காக ஆஸ்திரேலியாவுக்கு வந்த அன்றைய இந்திய வெளிவிவகார அமைச்சர் நரசிம்மராவை புலம்பெயர் தமிழர் குழு ஒன்று சந்தித்தது.

அவர் விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்கா அரசுடன் சேர்ந்து இந்தியாவை வெளியேறக் கோருவதை வேதனையானது என விவரித்து, முடிவில் மிகவும் நொந்து, இந்தத் தந்திரங்களுக்கு எல்லாம் அவர்கள் அனுபவிக்க வேண்டிய காலம் வரும் என்றார்.

"ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இந்தியா ஒரு சுண்டைக்காய் நாடல்ல, நீங்கள் கேட்டவுடன் ஓடி வருவதற்கும், சொன்னவுடன் ஓடிப் போவதற்கும். நீங்களாகவே சிங்கள தரப்பினரோடு உங்களது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியுமானால் அதை நீங்கள் செய்து கொள்ளுங்கள். அப்படி வரும் ஏற்பாடுகளை இந்தியா வரவேற்கும். ஆனால் இதுவரை அவர்களுடன் இருந்த வரலாறு உங்களுக்குப் புத்தி சொல்ல வேண்டும்." – என்றார்.



சர்ச்சைக்குரிய காலத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் நரசிம்மராவும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினாவும்.

விடுதலைப் புலிகள் தங்களது ஏகோபித்த அதிகாரங்களுக்காக, இந்தியப் படைகளை வெளியேற்றிக்கொள்ளவே இந்தப் பேச்சுக்களை பிரேமதாஸாவுடன் நடத்துகிறார்கள், இனப்பிரச்சனைக்கான ஓர் இணக்கத் தீர்வு என்ற ரீதியில் பேசவில்லை என்பது சிங்கள ஊடகங்களினாலும் உளவு வட்டாரங்களாலும் பறைசாற்றப்பட்டு, அவர்கள் தொடர்ந்தும் ஆயுதங்களுடன் தனிநாடு கோரித்தான் போராடுவார்கள் எனக் கணிப்பிடப்பட்டது.



இலங்கை – இந்திய ஒப்பந்த சமயத்தில் பிரதமர் ராஜிவ் காந்திக்குப் பின்னால் இந்திய வெளிவிவகார அமைச்சர் நரசிம்மராவ்.

விடுதலைப் புலிகளின் தந்திரங்கள் 30 ஏப்ரல் 1989 பேச்சுக்கள் ஆரம்பமாகிய போது புலிகளால் அதன் தளபதிகளுக்கு அனுப்பப்பட்ட இரகசியமான சுவரொட்டித் தகவல் ஒன்று ஸ்ரீலங்கா இராணுவத்தின் உளவுப் பகுதியால் பெறப்பட்டது.

அந்தத் தகவலில் அந்தச் சுவரொட்டியை விடுதலைப் புலிகளின் எல்லா முகாம்களிலும் ஒட்ட வேண்டும் எனப் பணிபிடப்பட்டிருந்தது.

அது விடுதலை புலிகளின் பெயரில் முன்னர் அறியப்படாத 'தேசபக்தர்கள்' என்ற தரப்பிடமிருந்து வந்ததாகத் தயாரிக்கப்பட்டிருந்தது.

ஜே.வி.பி. உபயோகித்த 'தேச பிரேமி' என்ற பெயருக்கு இணையாக அது தமிழில் 'தேச பக்தர்கள்' என்று இருந்தது.

இந்தச் சுவரொட்டியைப் பற்றிய சில கேள்விகள் எழுப்பப்பட்டன. ஆனாலும் விடுதலைப் புலிகள் அனுப்பியவையே இது என இராணுவ வட்டாரங்கள் உறுதிப்படுத்தின.

அதிலிருந்த வாசகங்கள்:–

1. முன்னர் பண்டா, டட்லி. இப்பொழுது பிரேமா.
தமிழர்கள் மேலும் ஏமாறுவதற்கு தயார் இல்லை .
தமிழீழம் ஒன்றுதான் வழி
2. பேச்சுவார்த்தைகள் இந்தியர்களை வெளியேற்றா.
பேச்சுவார்த்தைகள் எங்களது ஈழத்தைப் பெற்று தரா.
* இந்தியர்களைத் துரத்துவதற்கானால் சேர்ந்து பேசுங்கள்.
சிங்களவர்களுடன் சேர்ந்து வாழ்வதற்கு என்று பேச்சுக்கள் வேண்டாம்.
துரோகிகளை அழித்து இந்திய படைகளை விரட்டுங்கள்.
* அளவுக்கு அதிகமாக பேச வேண்டாம். உங்களது ஆயுதங்கள் பேச வேண்டும்
3. புலிகளே நீங்கள் உலகின் நாலாவது மிகப்பெரிய இந்தியராணுவத்தை விரட்டி விரட்டி அடித்தீர்கள்!
இப்போது அவர்களின் முளைகளையே வென்று விட வேண்டும்.
உங்களது பேச்சும் மூச்சும் தமிழீழம் என்றே இருக்க வேண்டும்.
அதனை இப்பொழுது பிரகடனப் படுத்துங்கள்.
4. நாடாளுமன்றம் இல்லாமல் போனது.
மாகாண சபைகள் வந்துள்ளன.
ஆனால் எங்களுக்கு தற்சமயம் என்ன கிடைத்துள்ளது?
எங்களது மண் பறி போகிறது.
அப்படி எனும் போது ஏன் பேச வேண்டும்?
5. அவர்கள் சிங்களத் தரப்புகள் கொலை, கொள்ளைகளைச் செய்பவர்கள். எங்களது பெண்களை மானபங்கப்படுத்தியும் உள்ளார்கள்.

புலிகளே! நீங்கள் அவர்களை பேச்சுவார்த்தைகளுக்கு அழைத்த நேரங்களில் அதை அவர்கள் நிராகரித்தார்கள்.

இப்பொழுது அவர்கள் பேச்சு வார்த்தைக்கு வந்துள்ளார்கள்.

உங்கள் பலத்தை காட்டுங்கள்.

அவர்கள் நச்சுப் பாம்புகள், தீங்குகள் செய்யாதவற்றை கூட தீண்டும்.

ஆதலால் எங்களுக்கு பேச்சுவார்த்தைகள் வேண்டாம்.

**- தேச பக்தர்கள் -**



பின்னாளில் பிரதமரானார் நரசிம்மராவ். 1990 முதல் 2004 வரை இந்தியப் பிரதமர் பதவியை வகித்த ஐந்து பிரமுகர்கள் முறையே தேவகௌடா, வாஜ்பாய், நரசிம்மராவ், சந்திரசேகர், ஐ.கே.குஜ்ரால். இவர்களில் வாஜ்பாய், நரசிம்மராவ், ஐ.கே.குஜ்ரால் மூவரும் இந்திய வெளிவிவகார அமைச்சர்களாகத் திறம்பட பணியாற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரேமதாஸாவினது குறியும் இந்தியப் படைகளை வெளியேற்றுவதுதான். அவை நடந்தவுடன் இரு பகுதியினரது தந்திரங்களும் அவர்களையே பதம் பார்த்தன.

(வளரும்...)

காலைக்கதிர் Kalaikkathir

## ஜெனிவா பிரேரணை .......

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

**செல்வம் அடைக்கலநாதன்**

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பில் உள்ளடங்கும் தமிழீழ விடுதலை அமைப்பின் (ரெலோ) தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

இப்பிரேரணையில் பயங்கரவாதத்தடைச் சட்டம் உள்ளிட்ட சில விடயங்களில் நாம் எதிர்பார்த்ததைப் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இருப்பினும் அவற்றை அரசாங்கம் உரியவாறு நடைமுறைப்படுத்துமா என்பதும் அல்லது இப்பிரேரணையில் உள்ள விடயங்களை அரசாங்கம் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளுமா என்பதும் சந்தேகத்திற்குரிய விடயமாகவே காணப்படுகின்றது.

எமது மக்கள் நீதியைப்பெற்றுக்கொள்ளும் விவகாரத்தில் சர்வதேச சமூகத்தின் மீதே நம்பிக்கை வைத்திருக்கின்றார்கள். எனவே அதற்கேற்றவாறு இணை அனுசரணை நாடுகள் செயற்படவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாக இருக்கின்றது. குறிப்பாக இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும் ஏனைய உறுப்புநாடுகளும் வலியுறுத்தவேண்டியது அவசியமாகும். - என்று தெரிவித்தார்.

**செல்வராஜா கஜேந்திரன்**

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், இணை அனுசரணை நாடுகளால் தயாரிக்கப்பட்டிருக்கும் புதிய பிரேரணையின் உள்ளடக்கம் குறித்துத் தம்மால் திருப்தியடையமுடியாது என்று தெரிவித்தார்.

## ரணிலும் துணைவியாரும் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறைந்த இரண்டாம் எலிசபெத் மகாராணி யின் இறுதிச் சடங்கு இன்று வெஸ்ட்மின்ஸ்டர் அபே தேவஸ்தானத்தில் நடைபெற உள்ளது.

## ஜெனிவாவில் இந்தியப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அன்றைய தினமே மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான அறிக்கை மீதான விவாதமும் நடைபெற்றது. அதனையடுத்து இரு தினங்களில் இலங்கை தொடர்பில் பிரிட்டன் தலைமையிலான இணையனுசரணை நாடுகள் தயாரித்திருக்கும் புதிய பிரேரணை வரைவு வெளியாகியிருந்தது. இவ்வாறானதொரு பின்னணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் ஜெனிவா சென்றிருந்தார். அங்கு சில முக்கிய சந்திப்புக்களிலும் கலந்துகொண்டிருக்கின்றார்.

அதன் ஓரங்கமாக ஐக்கிய நாடுகள் சபைக்கான இந்தியாவின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி இந்த்ரா மணி பாண்டேவை சந்தித்த எம்.ஏ.சுமந்திரன், இலங்கை தொடர்பில் கொண்டுவரப்படவிருக்கும் புதிய பிரேரணை தொடர்பிலும் அவருடன் பேச்சுக்களை முன்னெடுத்திருக்கின்றார்.

கவுன்ஸிலில் கடந்த திங்களன்று இடம்பெற்ற இலங்கை தொடர்பான விவாதத்தின்போது அரசியல் தீர்வை வழங்குவதில் இலங்கை அரசாங்கம் முன்னேற்றகரமான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லையென இந்தியப் பிரதிநிதி மணி பாண்டே சுட்டிக்காட்டியிருந்தார்.

அவ்விடயம் இணை அனுசரணை நாடுகளால் தயாரிக்கப்பட்டிருக்கும் புதிய பிரேரணையில் பின்னணியைத் தெளிவுபடுத்தும் முன்னுரைப் பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள நிலையில், அதனை செயற்பாடு அவதானிப்புகள் தொடர்பான பந்திக்கு மாற்றுமாறு சுமந்திரன் ஏற்கனவே இணை அனுசரணை நாடுகளிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் மணி பாண்டேவை சந்தித்த எம்.ஏ.சுமந்திரன், இலங்கை தொடர்பில் பிரிட்டன் தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால் கொண்டுவரப்படவிருக்கும் புதிய பிரேரணையை ஆதரிக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

## இராஜாங்க அமைச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை 39 இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கு அமைச்சர்களின் சம்பளம் வழங்கப்பட மாட்டாது என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஆனால் புதிதாக பதவியேற்றுள்ள இராஜாங்க அமைச்சர்கள், தமக்கு செயலாளர்களும் உதவியாளர்களும் தேவை எனக் கோரிக்கை விடுத்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

அதுமட்டுமின்றி அவர்களின் அமைச்சுக்குரிய விடயதானங்கள் வர்த்தமானியில் வெளியிடப்படாமல் இருப்பது குறித்தும் இராஜாங்க அமைச்சர்கள் கவலையடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர்கள் நியமனம் ஏறக்குறைய பஸில் ராஜபக்ஷவின் வற்புறுத்தலின் பேரிலேயே இடம்பெற்றதாகவும், இராஜாங்க அமைச்சுப் பதவிகளைப் பெற்ற பலர், தமக்குக் கிடைத்த இராஜாங்க அமைச்சர் பதவிகளுக்காக பஸில் ராஜபக்ஷவுக்குப் பகிரங்கமாக நன்றி தெரிவித்திருந்தார்கள் எனவும் கூறப்பட்டது.

அமைச்சரவை அமைச்சர்களுக்கு இராஜாங்க அமைச்சர்கள் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என ஜனாதிபதி எதிர்பார்க்கிறார். ஆனால், இராஜாங்க அமைச்சர்கள் கோரும் வகையில் செயலாளர்களை நியமிக்கவோ அல்லது விடயதானங்களை வர்த்தமானியில் வெளியிடவோ ஜனாதிபதி தயாராக இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## இறக்குமதித் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோடம்பழம் 3075.ரூபாக்கு விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ திராட்சை 5,000 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது.

இறக்குமதி கட்டுப்பாடுகள், இறக்குமதி வரி அதிகரிப்பு மற்றும் அந்நிய செலாவணி நெருக்கடி போன்ற காரணங்களால் விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் கூறுகின்றனர்.

## 46 இலங்கையருடன் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மீன்பிடி படகு புறப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஹலவத்த - அம்பகண்டவில பிரதேசத்தில் வசிக்கும் ஒருவரினால் இந்தக் கப்பல் ஓட்டிச் செல்லப்பட்டுள்ளது.

பின்னர், ஆழ்கடலில் உள்ள கப்பலுடன் மற்றொரு குழு சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஒருசில பெண்களும் சிறு குழந்தைகளும் ஒன்றுசேர்க்கப்பட்ட குழுவில் இருந்தனர்.

சர்வதேசக் கடலில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக இந்த படகு கடலில் மிதந்து கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

அங்கு கடலில் சென்று கொண்டிருந்த மற்றொரு கப்பலின் குழுவால் ஆகஸ்ட் 16 ஆம் திகதி கப்பல் மீட்கப்பட்டு தொழில்நுட்பக் கோளாறு சரி செய்யப்பட்டது.

படகு மீண்டும் பயணத்தை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனினும், இந்த படகு நேற்று முன்தினம் மீண்டும் காணாமல் போனதாகத் தெரிவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், 46 பேரை ஏற்றிச் செல்லும் இந்தப் படகு தற்போது ரீயூனியன் தீவின் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தீவு இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள ஒரு பிரெஞ்சுத் தீவு. இது மடகஸ்காருக்குக் கிழக்கே, மொரிசியசிலிருந்து 200 கிமீ (120 மைல்) தென்மேற்காக அமைந்துள்ளது. இதன் தலைநகரம் சென் - தெனி. இங்குள்ள மக்கள்தொகை சுமார் ஒன்பது லட்சம் ஆகும்.

## அதிகாரப் பகிர்வு, .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரஷ்யாவிற்கு எதிராக போரிட்டுக்கொண்டிருக்கும் உக்ரைன் இராணுவத்தை விட இலங்கை இராணுவம் இரண்டு மடங்கு பெரியது என கரி சங்கரி தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்திற்கு இது குறித்து எழுதிய பின்னர் தான் வொஷிங்டனில் இடம்பெற்ற சர்வதேச நாணயநிதியத்தின் நிறைவேற்றுகுழுவின் அதிகாரிகளுடனான சந்திப்பின்போது தெளிவான கொள்கை ஆவணங்களை சந்தித்துள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர், கனடாவின் நிதியமைச்சர் மற்றும் பிரதி பிரதமர் ஆகியோருடனான சந்திப்பின் போதும் இந்த ஆவணங்களை சமர்ப்பித்துள்ளார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கனடா, அயர்லாந்து ஆகிய நாடுகளிற்கான சர்வதேச நாணயநிதியத்தின் நிறைவேற்று சபையின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார் எனவும் கரி சங்கரி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் சர்வதேச நாணயநிதியத்திற்கும் இடையில் பணியாளர் மட்ட இணக்கப்பாடு ஏற்பட்டதிலிருந்து தனது பேச்சுவார்த்தைகளின் போது இராணுவமயப்படுத்தல், நாட்டை மீண்டும் நிலையான பொருளாதார பாதைக்கு கொண்டு செல்வது எப்படி என்பது குறித்த கரிசனைகளை வெளிப்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டை மீண்டும் நிலையான பொருளாதார பாதைக்கு கொண்டு செல்வது என்பது வடக்குகிழக்கிற்கு முழுமையாக அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதிலிருந்து உருவாகவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கிழக்கு அபிவிருத்தி செய்யப்படாத நிலையில் காணப்படுகின்றது. வடக்குகிழக்கு தனது தொழில்துறையை அபிவிருத்தி செய்வதற்கு சுயாட்சி அவசியம் என குறிப்பிட்டுள்ள ஹரி சங்கரி வடகிழக்கின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மிகவும் குறைவாக உள்ளதையும் இலங்கையின் மொத்த தேசிய உற்பத்திக்கு வடக்குகிழக்கின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 4.6 வீதமே பங்களிப்பு வழங்குவதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு மாறாக மேல்மாகாணம் 30 வீதம் பங்களிப்பு செய்கின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். வடக்கு, கிழக்கின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு சர்வதேச சந்தையை சென்றடைவது அவசியம். வடக்கில் விமான நிலையங்களைத் திறக்கவேண்டும, கப்பல் போக்குவரத்து மற்றும் நேரடி வெளிநாட்டு முதலீடு ஆகியன அவசியம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தங்கள் பொருளாதார எதிர்காலத்தை பாதுகாப்பதற்கு உள்ளூரில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் அவசியம் எனவும் கரி சங்கரி தெரிவித்துள்ளார்.

ஐக்கியநாடுகள்மனிதஉரிமைபேரவையின் நகல்வடிவப் பிரேரணை குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள கரி சங்கரி தற்போது விவாதிக்கப்படும் பிரேரணை எதிர்வரும் வருடங்களில் பொறுப்புக் கூறப்படுவதை முக்கிய இலக்காக கொண்டதாக காணப்படும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நகல்வடிவ பிரேரணை தற்போது இன்னமும் ஆராயப்படும், விவாதிக்கப்படும் கட்டத்திலேயே உள்ளது. இலங்கையில் இழைக்கப்பட்ட குற்றங்களிற்கு பொறுப்புக்கூறப்படுவதை உறுதி செய்யும் விதத்தில் அது வலுப்படுத்தப்படும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஆவணத்தில் உள்ள கொள்கைகளிற்கு பரந்துபட்ட ஆதரவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம் -
076 443 8622
kalaikkathiradvt@gmail.com






காலைக்கதிர் Kalaikkathir

# திருகோணமலை ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை நீடிக்கச்செய்வதை விடுத்து உடன் தீர்வு காண்க!

## ஜனாதிபதி ரணிலுக்கு இரா.சம்பந்தன் வலியுறுத்திக் கடிதம்



தமிழர்களின் பூர்வீகப் பிரதேசமாகிய திருகோணமலையில் தொல்லியல் திணைக்களத்தினதும் பெரும்பான்மை சிங்கள இனத்தவர்களதும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை உடன் நிறுத்தி, இந்தப் பிரச்சினையை மேலும் நீடிக்க விடாது, உடன் தீர்வு காணப்படவேண்டும் என வலியுறுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தின் முழுமையும் வருமாறு –

திருக்கோணேஸ்வரம் – திருகோணமலையில் அமைந்துள்ள 'தட்சன கைலாசம்' எனும் புகழ்பெற்ற இந்துக்கோவில் மற்றும் திருகோணமலை துறைமுகம். திருகோணமலையில் அண்மைக் காலங்களில் மேற்குறிப்பிடப்பட்ட இரு நிறுவனங்களான திருக்கோணேஸ்வரம் – தட்சன கையாலசம் – மற்றும் திருகோணமலை துறைமுகம் ஆகியன தொடர்பான செயற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டு, ஒரு சில தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவென்று எனக்கு அறியக் கிடைத்துள்ளது.

முதலாவதாக நான் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகின்றேன் –

பண்டைய கோயிலான திருக்கோணேஸ்வரம் – தட்சன கையாலசம் – போர்த்துகேய ஆளுநரான கொன்ஸ்டாண்டின் தேசவால் 1623 ஆம் ஆண்டு சிதைத்தழிக்கப்பட்டது. இந்தக் கோவில் 1000 தூன்களையும் இருமருங்கிலும் கடலை அண்டியதாக இரண்டும் நடுவில் ஒன்றுமாக 3 ராஜ கோபுரங்களையும் கொண்டமைந்திருந்தாகக் கூறப்படுகிறது.

இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளில் இருந்த பெரும்பாலான இந்துக்கள் வேறெந்தக் கோவிலைக் காட்டிலும் இந்தக் கோவிலையே அதிகம் வழிபட்டனர் என வண. கியுறொஸ் காலத்து போர்த்துகேய வரலாற்றாசியர்கள் கூறுவர். இந்தக் கோயிலை 'கிழக்கின் றோமாபுரி' என்றே அவர்கள் கருதினர்.

புகழ்பெற்ற இலங்கையரான சேர் போல் பீரிஸ் தனது வரலாற்று நூல்களில் விஜயன் இலங்கைக்கு வருவதற்கு நீண்ட காலத்துக்கு முன்னரே இலங்கையில் சிவ பெருமானின் ஐந்து ஈஸ்வரங்கள் – வடக்கில் நகுலேஸ்வரம் மற்றும் திருக்கேதீஸ்வரம், கிழக்கில் திருக்கோணேஸ்வரம், மேற்கில் முன்னேஸ்வரம் மற்றும் தெற்கில் தொண்டீஸ்வரம் – இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். ஏனைய நான்கு கோயில்களும் செழிப்புற்றபோது இந்தக்கோயில் கலையிழந்ததாகக் கூறப்படுகிறது. இவ்வைந்து சிவாலயங்களும் வடக்கிலும், கிழக்கிலும், மேற்கிலும் தெற்கிலுமென இலங்கையைச் சுற்றிலும் நாட்டைப் பாதுகாப்பதற்காக கட்டப்பட்டதெனக் கூறப்படுகிறது. விஜயன்தான் சிங்கள இனத்தின் முன்னோடி.

வழிபடுவதற்காக திருகோணமலைக்குச் சென்ற இந்திய பிரதமர் ஸ்ரீ சரன்சிங் வாகனத்திலிருந்து இறங்கியதும் பின்வரும் வார்த்தைகளைக் கூறினார் 'நான் தட்சண கைலாசத்திற்கு வந்துள்ளேன்'. இக்கோயிலின் பழைமைச் சிறப்பும் புனிதத்தன்மையும் பாதுகாக்கப்பட வேண்டும்.

அண்மைக் காலங்களில் சில முன்மொழிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன். திருக்கோணேஸ்வரம் பிரெட்ரிக் கோட்டையின் உட்புறத்தே அமைந்துள்ளது. கோட்டையின் முன் பக்கத்திலுள்ள பிரதான நுழைவாயிலின் ஊடாக இந்தப் பகுதியினுள் நாம் செல்லலாம். சில தசாப்தங்களுக்கு முன்னர், பிரெட்ரிக் கோட்டையின் ஒரு பகுதியில் தங்கியிருந்த சில இராணுவ சிப்பாய்கள் தாம் தங்கியிருந்த நிலப்பகுதியில் புத்தர் சிலையொன்றை நிர்மாணித்தனர். திருக்கோணேஸ்வரத்தையும் புத்த பெருமானையும் வழிபட விரும்பிய மக்கள் இந்தப் பிரதான நுழைவாயிலின் வழியாகக் கோட்டையினுள் சென்று வழிபாடு செய்தனர். கோட்டைக்குள் நுழைந்து புத்தபெருமானையும் கோணேஸ்வரரையும் வழிபடுவதற்கு வேறு வழிகள் எவையும் இருக்கவில்லை.

அண்மைக் காலங்களில் புத்தபெருமானின் சிலைக்கும் அங்கிருந்து திருக்கோணேஸ்வரத்துக்கும் ஒரு புதிய பாதை திறக்கப்பட வேண்டுமென்று முன்மொழிவொன்றுமேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தேவையற்றது என்பதோடு, ஆள்கள் இந்த வழியில் அத்துமீறுவதற்கும் அந்தக் காணியில் தங்கியிருப்பதற்கும் வழிவகுக்கும். அது திருக்கோணேஸ்வரம் கோயில் மற்றும் புத்த பெருமானின் சிலை ஆகியவற்றின் புனிதத்தன்மையும் பக்தி உணர்வும் குறைவடைவடைவதற்கே வழிவகுக்கும்.

சில ஆண்டுகளுக்கு முன்னர், ஒரு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரால் இரத்தினபுரியிலிருந்து சில வர்த்தகர்கள் கொண்டுவரப்பட்டு, கோணேஸ்வரத்துக்கான பாதையில் அமர்த்தப்பட்டனர். அது இப்பகுதியின் புனிதத்தன்மையும் பக்தி உணர்வும் குறைவடைவதற்கு காரணமாகியது. இச்சத் தற்காலிக கட்டடங்களில் இந் நபர்களால் இறைச்சியும் மீனும் சமைக்கப்பட்டன. இந்தப் பகுதியிலிருந்து இந்த நபர்கள் அகற்றப்பட வேண்டுமென தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டது. எனினும் அது அமுல்படுத்தப்படவில்லை.

'புத்தபெருமான் சிலை உள்ள பகுதியில் திருக்கோணேஸ்வரம் வரையிலான இந்தப் புதிய பாதை திறப்பு நிறுத்தப்பட வேண்டுமென நான் வினயமாகக் கேட்டுக்கொள்கிறேன்'. இது தீங்கு இழைக்கப்படுவதற்கே வழிவகுக்கும்.

தொல்லியல் உத்தியோகத்தர்கள் எனக் கூறிக்கொள்ளும் சில நபர்கள் இந்தப் பகுதிக்குச் சென்றுள்ளார்கள் என்றும், எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கென சொந்த திட்டங்கள் இருக்கக்கூடும்.

முன்னாள் ஜனாதிபதி கிழக்கு மாகாணத்தை ஒரு தொல்லியல் ஆராய்ச்சி பகுதியாகப் பிரகடனப்படுத்தி, அத்தகைய உரிமைகோரலை உண்மையாக்கும் வகையில் பௌத்த கோயில்களுக்கு அரச காணிகளை குறிப்பாக இனங்கண்டு ஒதுக்கீடு செய்தல் உள்ளிட்ட பணியை நிறைவேற்றுவதற்காக சிங்கள நபர்களை மட்டும் கொண்ட ஜனாதிபதி செயலணி ஒன்றை நியமித்தார்.

நான் முன்னாள் ஜனாதிபதிக்குக் கடிதமொன்றை அனுப்பினேன். அதன் பிரதியொன்றை இத்துடன் இணைக்கிறேன். அதன் விளைவாக, நான் அறிந்த வரையில் மேலும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. இம் முன்மொழிவு செயல்படுத்தப்படக்கூடும்.

பல தலைமுறைகளாகவும் நூற்றாண்டுகளாகவும் தமிழர்களின் வரலாற்று ரீதியான வாழ்விடங்களாகவிருக்கும் காணியைப் பாரதூரமானதொரு முறையில் மாற்றியமைக்கும் வகையில் மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் பிரிவுகளின் எல்லைகளை மாற்றுவதற்கான ஒருசில ஆலோசனைகள் கலந்துரையாடப்பட்டுள்ளன எனவும் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு சர்வதேச உடன்படிக்கையான இந்திய இலங்கை ஒப்பந்தத்தின்கீழ், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தமிழர்களினதும் தமிழ் பேசும் மக்களினதும் வரலாற்று ரீதியான வாழ்விடப் பகுதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்தின் வடகோடியில் அமைந்துள்ள ஒரு பெரும் நிலப்பரப்பு திருகோணமலை மாவட்டத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக வட மத்திய மாகாணத்திலுள்ள அநுராதபுர மாவட்டத்திலிருந்து ஒரு பெரும் நிலப்பரப்பு பதிலீடு செய்யப்படவுள்ளதென எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் முதன்மையான நோக்கம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இனத்துவ நிலத் தொடர்ச்சியை துண்டிப்பதாகும். பொலன்னறுவை மாவட்டத்திலிருந்து பெரும் நிலப்பரப்பொன்றை கிழக்கு மாகாணத்துக்குள் கொண்டுவரும் அதேவேளை, கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்திலிருந்து பெரும் நிலப்பரப்பொன்றை பொலன்னறுவை மாவட்டத்தோடு இணைக்கும் அதே போன்றதொரு முன்மொழிவு திருகோணமலையின் தெற்குப் பகுதியில் அமுல்படுத்தப்படவுள்ளது. இது, பாரதூரமான எதிர்வலைகளையும் உலகில் இரண்டாவது மிகச் சிறந்த துறைமுகமாகக் கருதப்படும் திருகோணமலைத் துறைமுகத்துக்கு பாரதூரமான பின்விளைவுகளையும் ஏற்படுத்தக்கூடிய சாத்தியத்தோடு, வடக்கு மற்றும் தெற்கின் கடல்சார் எல்லைகள் ஊறுபடுவதற்கு வழிவகுக்கும். இந்தப் பகுதிகளில் வாழுகின்ற தமிழ்ப் பேசும் மக்களோ அல்லது எமது அயல் நாடோ அல்லது மிக அருகில் உள்ள நாடுகளோ இந்த நடவடிக்கையை அங்கீகரிக்க மாட்டாது.

திருகோணமலை மாவட்டத்தின் வடக்கிலும் தெற்கிலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கிடையில் இனத்துவ நிலத் தொடர்ச்சியை இல்லாது செய்வதே இதன் முழு நோக்கமாகும். கிழக்கு மாகாணத்தை ஒரு சிங்கள பெரும்பான்மை மாகாணமாக மாற்றியமைப்பதும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கிடையிலான இனத்துவ நிலத் தொடர்ச்சியை துண்டிப்பதும் பேரினவாத சிங்கள அரசாங்கங்களின் நீண்ட கால குறிக்கோளாக இருந்து வருகிறது.

அத்தகைய சிந்தனைகள் அடங்கிய சம்பவங்களை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

1975 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் புல்மோட்டை மற்றும் தென்மரவடி ஆகிய கிராமங்களில் உள்ள பெருமளவு காணியும் வேறு காணிகளும் அநுராதபுர பிரதேச செயலக பிரிவிற்கு மாற்றப்பட்டன. அப் பிரிவின் நியாதிக்கத்தின் கீழ் சிங்களவர்களுக்கு மாத்திரமே காணி வழங்கப்பட்டது என்பதோடு, ஒரு தமிழருக்கோ அல்லது முஸ்லிமுக்கோ காணி வழங்கப்படவில்லை. அரசாங்கத்தில் மாற்றமொன்று ஏற்படும் வரை இக் காணி அநுராதபுர பிரதேச செயலகப் பிரிவின் கட்டுப்பாட்டின் கீழ் தொடர்ந்து இருந்துவந்தது. இந்த நிலைப்பாட்டுக்கு திருகோணமலை மாவட்டத்தின் காணி மீண்டும் திருகோணமலை மாவட்டத்துக்கே கொண்டுவரப்பட வேண்டும் என்று வலியுறுத்தி தமிழ் மக்களால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. தரிசு நிலமாகவிருந்த காணிகள் சிங்களவர்களால் முழுவதுமாக சுவீகரிக்கப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டபோதிலும், இந்நடவடிக்கைகள் மூலம் தமிழ் மக்கள் இனத்துவ நிலத்தொடர்ச்சி தொடர்வதை உறுதிப்படுத்தினர்.

1984 ஆண்டின் இறுதிப் பகுதியில், தென்மரமாடி கிராமத்தில் வாழ்ந்த தமிழ் மக்கள் தாக்கப்பட்டனர் சிலர் கொல்லப்பட்டனர். பலர் காயமுற்றனர் வீடுகள் தீயூட்டப்பட்டன் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. தமிழ் மக்கள் தென்மரவாடி கிராமத்திலிருந்து முல்லைத் தீவுக்கு தப்பியோடினர். அவர்களுள் சிலர் மாத்திரமே திரும்பி வந்துள்ளனர்.

அதிகாரப் பரவலாக்கல் அலகு தொடர்பான பிரச்சினையை தீர்த்து வைப்பதில் அரசாங்கம் கிழக்கு மாகாணத்தை பின்வருமாறு மூன்றாகப் பிரிப்பதற்கு முன்மொழிந்தது.

1. அம்பாறை முஸ்லிம் பெரும்பான்மைப் பகுதி
2. மட்டக்களப்பு தமிழர் பெரும்பான்மைப் பகுதி
3. திருகோணமலை சிங்கள பெரும்பான்மைப் பகுதி

வடக்குப் பகுதியில் வடமத்திய மாகாணத்தில் உள்ள அநுராதபுர மாவட்டத்திலிருந்தும்; தெற்குப் பகுதியில் வடமத்தியமாகாணத்தின்பொலன்னறுவையிலிருந்தும் காணியைக் கொண்டுவருவது கிழக்கு மாகாணத்தில் சிங்கள மக்களை பெரும்பான்மையினராக அதிலும் குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் ஒரு பெரும்பான்மையினராக ஆக்குவதை நோக்கமாகக் கொண்டதாகும். இம் முயற்சிகள் அனைத்துக்கும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள ஒவ்வொரு மாவட்டமும் தமிழ் பேசும் மக்களை பெரும்பான்மையினராகக் கொண்டதாகும் என்பதோடு, எந்தவொரு மாவட்டமும் சிங்கள பெரும்பான்மை மாவட்டமாக இல்லை.

இது, வடக்கு கிழக்கு மாகாணங்களை தமது வரலாற்று ரீதியான வாழ்விடப் பிரதேசங்களாகக் கொண்ட தமிழர்கள் தமிழ் பேசும் மக்கள் ஓர் ஐக்கிய மற்றும் பிரிபடாத இலங்கை என்ற வரையறைக்குள் உள்ளக சுய நிர்ணய உரிமைக்கு உரித்துடைய ஒரு மக்கள் குழுவினர் ஆவர் என்ற நிலைப்பாட்டிற்கு அமைவானதாகும். இதனையே தமிழர்கள் தமிழ் பேசும் மக்கள் ஓர் அரசியல் தீர்வாகக் கோரிநிற்கின்றனர். இந் நிலைப்பாடு 1956ஆம் ஆண்டிலிருந்து அனைத்து ஜனநாயகத் தீர்ப்புகளிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பிரச்சினையை நீடிக்கச் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதைவிட, இந்த அடிப்படையில் இப் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட வேண்டுமென நான் பலமாக வலியுறுத்துகிறேன்.

இதன் பிரதிகள் பிரதமர், தொல்லியல் அமைச்சர், தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் நாயகம், திருகோணமலை மாவட்ட உதவி தொல்லியல் பணிப்பாளர் நாயகம், கிழக்கு மாகாண ஆளுநர், திருகோணமலை மாவட்ட செயலர், பட்டினமும் சூழலும், குச்சவெளி, வெருகல், ஈச்சிலம்பத்தை ஆகிய பிரதேச செயலர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.09.2022இல் வெளியிடப்பெற்றது.